# தலைவர் 'பிரபா' பணிப்பில் 33 கைதிகள் விடுதலை

விலை ரூபா 5–00

# ஈழநாடு

**EELANADU**
**NATIONAL TAMIL DAILY**

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 6 இதழ் 291
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22–11–1994

(யாழ்ப்பாணம்)
மாவீரர் தினத்தையொட்டி தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரனின் பணிப்பின் பேரில் 33 கைதிகள் தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசனால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர், அத்தோடு ஏழு பேருக்கு தண்டனையும் குறைக்கப்பட்டுள்ளது.

இவர்களை நேற்று விடுதலை செய்த தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் பத்திரிகையாளர்களிடம்கூறியதாவது; தமிழீழ தேசிய தலைவரின் பணிப்பின் பேரில் இவர்கள் விடுதலை செய்யப்படுகின்றார்கள். இவர்களில் 18 பேர் பெண்களாவர். 15 பேர் ஆண்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## மாவீரர்வார நிகழ்வுகள் எழுச்சியுடன் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
மாவீரர் வார நிகழ்வுகள் நேற்றுக் காலை உணர்வுபூர்வமாகக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எழுச்சியுடன் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர்.

மாவீரர் புகழ் பாடும் பாடல்களை இசை நாடாக்கள் குடாநாடு எங்கும் ஒலிபரப்பப்படுகின்றன.

இதனை முன்னிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் போராளிகளின் போராட்ட வரலாறுகள் பற்றிச் சித்தரிக்கப்பட்டுள்ளன. (க-இ

## இன்று நாடாளுமன்றில்

# 'மினிபட்ஜெட்' பாதுகாப்புக்கு 566 கோடி ரூபா ஒதுக்கீடு!

## புனர்வாழ்வுக்கு 150 கோடி ரூபா!

[கொழும்பு]

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள 'மினி பட்ஜெட்'டில் நாட்டின் பாதுகாப்புத்துறைக்கு மொத்தம் 566 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது' மினி பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய தொகை இதுவாகும் இதேவேளையில் புனர்வாழ்வு அமைச்சுக்கு 150 கோடி ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது'

புதிய அரசாங்கத்தின் 'மினி பட்ஜெட்' இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது பாதுகாப்புக்கு அதிகளவு பணம் ஒதுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 56 கோடி ரூபாவும் 370 கோடி ரூபா இராணுவ நடவடிக்கைளுக்கும், 140 கோடி ரூபா கடற்படை விமானப்படை நடவடிக்கைகளுக்குமாக மொத்தம் 566 கோடி

(4'ம் பக்கம் பார்க்க)

## ரஷ்ய ஆயுதங்கள் மீண்டும் இறக்குமதி

(கோழும்பு)
பொதுசன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்பு, ரத்துச்செய்யப்பட்ட ரஷ்ய ஆயுதங்களை மீண்டும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா பாதுகாப்பமைச்சர் என்ற ரீதியில் கையெ

[4ம் பக்கம் பார்க்க]

## சந்திரிகாவின் கூற்றுகளில் முரண்பாடு காணப்படுகிறது

ராணுவ ஆய்வாளர் கூறுகிறார்

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் சமாதானம் பற்றிக் கூறிய கூற்றுக்கும், தற்போதைய அவரின் கூற்றுக்களுக்கும் இடையில் முரண்பாடு காணப்படுகிறது.

இவ்வாறு இராணுவ ஆய்வாளரும் பிரபல பத்திரிகையாளருமான திரு. பி. சிவராம் நேற்று பி. பி. ஸி'க்கு அளித்த பேட்டியில் கூறினார் அவர் தமது பேட்டியில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

## காமினி கொலை விவகாரம்:
## பொலிஸாரின் சந்தேகம் வெளிநாடுகள் பக்கம்

(கொழும்பு!
காமினி கொல்லப்பட்ட கிராண்ட்பாஸ்குண்டு வெடிப்புக்குப் பின்னணியில் வெளிநாட்டு அமைப்பொன்று சம்பந்தப்பட்டிருப்பதாக பொலிஸாருக்கு தகவல் எட்டியுள்ளது என்று 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது,

குண்டு வெடிப்பில் சம்பந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் அமுதன் வித்துடலுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்)
நெடுங்கேணியில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து அண்மையில் மேற்கொண்ட தாக்குதலினால் வீரச்சாவடைந்த விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி லெப். கேர்ணல் அமுதனின் வித்துடலுக்கு பெருமளவு வன்னி மக்

(4ம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!

(கண்டி)
மலையகப் பகுதியில் பாதுகாப்பு நிலைமை கடுமையாகப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியாப் பகுதியில், இரு இளைஞர்கள் ரி-56 துப்பாக்கியுடனும், கைக்குண்டு மற்றும் ஒரு பிஸ்டலுடனும் கைது செய்யப்பட்டதைத்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசு தொண்டாவுக்கு விரைவில் கல்தா?

(கொழும்பு)
அமைசசர் எஸ். தொண்டமான் வெகுவிரைவில் பொன்சன ஐக்கிய முன்னணியிது அரசிலிருந்து நீக்கப்படுவார் என்று 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த விடயத்தில் அரசுக்கு ஆதரவளிப்போம்!

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை கோருகிறார்கள். ஆனால் அரசோ யுத்தநிறுத்தத்திற்கு இணங்கவில்லை. இந்த விடயத்தில் நாங்கள் அரசுக்கு ஆதரவளிப்போம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க 'சண்டே ரைம்ஸ்'க்கு தெரிவித்துள்ளார் அவர் இது பற்றி மேலும் கூறுகையில்;

விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை தொடர்ந்து நடத்துவார்கள் எனவேநாமும் இதற்கு எதிராக முன் எச்சரிக்கை நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும்,

காமினியின் கொலையைத் தொடர்ந்து, அரசு விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சை இக்கொலைக்குற்ற

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய் கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ரணிலுக்கு எதிராக புதிய கட்சி ஆரம்பிக்க முயற்சி?

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியில். ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைத்துவத்துக்கு விரோதமானவர்கள். புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர் என்று 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இப்பொழுது ரணில் விக்கிரம சிங்காவின் அணியில்

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

11-11-94 முதல் வியாழ மாற்ற பலன்கள்

ரூபா 10/- சத்யாவின் எல்லாராசிகளின் பலன் ள் எங்கும் கிடைக்கும் பாடசாலைப் புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள்,, சஞ்சிகைகளுக்கு தினேஷ் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (சி-1324)

அசகரைச் சீமையில் நாவல்

இது ரமணிச்சந்திரன் நாவலல்ல. 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம் பிள்ளையின் யதார்த்தமான நாவல். இங்கிலாந்து சென்ற எங்கள் இளசுகளின் கதை. (சி-1326)


### காமினி கொலைக்கு காரணமான

# தற்கொலைப் படைபெண் அடையாளம் காணப்பட்டார்?

(கொழும்பு)

காமினியின் கொலைக்கான குண்டுவெடிப்பிற்கு காரணமான தற்கொலைப் படைப் பெண் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

இவர் ஒரு தமிழ்ப்பெண் எனவும் கிருலப்பனை பகுதியில் கடந்த இரண்டரை வருடங்களாக வசித்து வந்ததாகவும் முன்னாள் எஸ்ரேட் சுப்பிரிண்டன் ஒருவரின் வீட்டு வேலைக்காரியே இவரை அடையாளம் காட்டியதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த வேலைககாரியும் கிருலப்பனையில்தான் வசிப்பவர். கடந்த வாரம் இவர் பொலிஸார் காட்டிய படம் ஒன்றிலிருந்து தற்கொலைப்படை பெண்ணை அடையாளம் காட்டியுள்ளாராம். மேற்படி தற்கொலைப்படைட்பெண் இரண்டு சிறு குழந்தைகளுடன் கிருலப்பனையில் வசித்ததாகவும் 1892 ம் ஆண்டில் இவர் சிறிதுகாலம் காணுமல்போய், மீண்டும் அந்த இரு குழந்தைகளும் இல்லாமல் வந்ததாகவும் தெரிவிக்கப்பகிறது.

பொலிஸாரின் தகவலின்படி முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவை சொன்றதாகக் கூறப்படும் பாபு என்பவர் இவரது கிருலப்பனை வீட்டிற்கு வந்து சென்றுள்ளாராம்.

இவரது வீட்டை சோதனையிட்ட பொலிஸார் அங்கிருந்த படமொன்றினை எடுத்து மேற்படி வேலைக்காரியிடம் காண்பித்தபோது தற்கொலைப் படைப் பெண்ணெனக் கூறப்படும் அதேபெண்தான் இவர் எனக் கூறினார்.

இதேவேளை இந்த பெண்ணை ஏன் முன்பே [குண்டு வெடித்த பின்] அடையாளம் காட்டவில்லை என வேலைக்காரியை பொலிஸார் விசாரித்துள்ளனர். உருக்குலைந்த தலையை திருத்தி அமைத்து பத்திரிகையில் படத்தை பிரசுரித்த போது இவர்தான் என்து அயலவர் என அடையாளம்காண முடியாது போய்விட்டதென்வும் தற்போது அதனை தம்மால் நன்கு அடையாளம் காணக்கூடியதாயிருப்பதாகவும் கூறியுள்ளார்.

மேலும் தற்கொலைப் பெண்ணின் காலில் முன்னர் காயமேற்பட்டதாகவும் அதற்கு அவரே தாஞக சிகிச்சை செய்ததாகவும் வேலைக்காரி கூறியதையடுத்து தற்கொலைப் பெண்ணின் சிதைந்த அவயவங்கள் வைக்கக்பட்டிருக்கும் பிரேத அறைக்கு இவரை அழைத்துச் சென்ற பொலிஸார் அங்கு அந்த தலையையும் மற்ற அவயவங்களையும் அடையாளம் காட்ட முடியுமா எனக் கேட்டபோது படத்தில் இருந்த பெண்ணும் இவரும் ஒரே ஆள் என்பது நிச்சயம் எனக் கூறினராம். இதையடுத்து தற்கொலைப் பெண்ணின் கால் பற்றி புலன் விசாரணை நடைபெறுவதுடன் அவரது நிரந்தர வதிவிடம் குறித்தும் தீவிரவிசாரணைகள் நடைபெற்று வருகிறதாம். சி

## மாவீரர் நாள் ஏற்பாடுகள்

[பண்டத்தரிப்பு[

வட பிராந்திய போக்குவரத்து சபையின் கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த ஊழியர்கள் மாவீரர் வாரத்தை முன்னிட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் செல்லும் வீதியை சிரமதான மூலம் துப்பரவு செய்தனர். 72

0 0

### அலங்கார வளைவு

[அரியாலை]

மாவீரர் வாரத்தை ஒட்டி யாழ். புகையிரத நிலைய வீதிச் சந்தியில் மாவீரர் அலங்கார வளைவு ஒன்று நிறுவப்பட்டு மாவீரர்களின் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

யாழ். புகையிரத நிலைய திவகமக்களின் அகதி முகாமிலும் மாவீரர் உருவப்படங்கள் வைக்கப்பட்டு சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. (59)

0 0

### அலங்காரப் பந்தல்

[பண்டத்தரிப்பு]

கட்டுடை சனசமூக நிலையம் கட்டுடைச் சந்தியில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு அலங்காரப் பந்தல் ஒன்றை நிறுவியுள்ளது. (72)

0 0

### சிரமதானம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட பனை அபிவிருத்தி சபை ஊழியர்கள் மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமதுஅலுவலகக் காணிப் பகுதிகளைசிரமதான மூலம் துப்பரவுசெய்துள்ளனர். 154

0 0

### பதாகைகள்

### கொடிகள்

[சாவகச்சேரி[

தென்மராட்சியில் வட்டவை ரீதியில் பிரமாண்டமான கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரில் சிவப்பு மஞ்சள் கொடிகள் பரவலாகப் பறக்கவிடப்பட்டுள்ளது. இவைதவிர முக்கிய இடங்களில் பதாகைகளும், அலங்கார வளைவுகளும் மாவீரர்களை நினைவுகூரத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது மாவீரர் வாரத்திற்கான சகல ஏற்பாடுகளும் தென்மராட்சிப் பகுதியில் நிறைவுபெற்றுள்ளது. 155

0 0

### விசேட அலங்காரம்

(பண்டத்தரிப்பு)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் வட்டவை பிரிவில் பொது நிறுவனங்களால் முக்கிய சந்திகள் அலங்கார வளைவுகள் நிறுவப்பட்டுள்ளன.

# ஜனாதிபதி முறை ஆட்சியில் பல குறைபாடுகள்

## தமிழ் கட்சிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையிலான அரசாங்கத்தில் பல குறைபாடுகள் இருப்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளன.

வடக்கு கிழக்கு பிரச்னை தீவிரமடைவதற்கு இந்த அரசியல் அமைப்புச் சட்டமும் ஒரு காரணமாகுமென்றும் அவை தெரிவித்துள்ளன.

சில தமிழ்க் கட்சிகள் நிர்வாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கோரியுள்ளன.

ஏனைய கட்சிகள் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களைக குறைப்பதற்கு ஆதரவு திரட்டிவருகின்றன.

இந்தமுறையைம்சிறுபான்மை உரிமைகளை பாதுகாக்குமு என்று முன்னர் கருத்துப்பட்டது. சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகள் தமது நிலையை தற்போது மாற்றிக் கொண்டிருக்கின்றன இது விசேடமான போக்காகும் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறுர்கள்.

நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு இந்தக் கட்சிகள் தமது யோசனைகளை ஏற்கனவே தெரிவித்துள்ளன.

### ஒய்வூதியக் கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு நயினுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு தற்போது யாழ். அடைக்கல மாதா தேவாயியத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருகிறது. 101

### ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

பயணிகள் படகுச்சேவை துறைகளான புலோப்பளை, பூநகரி ஆகிய இடங்களில் தங்க நகை, பணப்பை போன்றன கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரம் காட்டி கந்தர்மடத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். - சி

சண்டிலிப்பாய் மணிமேகன் சனசமூக நிலையத்தின் முன்றலில் விசேட அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. மாவீரர் வாரம் பற்றிய பதாகைகளும் வீதிகளில் கட்டப்பட்டுள்ளன. 72

# மார்ச்சில் தேர்தல்?

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதி முறையை ஒழித்த பின்பு பொதுசன ஐக்கிய முன்னணி மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலை அடுத்த வருடம் மார்ச் மாதம் 22-ந் திகதி நடாத்தும் என்று 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது. -ம-சி

### பிரதிஅமைச்சர்கள் பதவிப்பிரமாணம்

(கொழும்பு[

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிரதி அமைச்சர்கள் இன்று காலை அலரிமாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொள்வர். (க -இ)

### காமினி கொலை:

## தனது !நிபுணர்களை இந்தியா அனுப்பாது

(கொழும்பு)

கிருன்ட்பாஸ் குண்டுவெடிப்பு தொடர்பாக இந்திய நிபுணர்களை இலங்கைக்கு இந்தியா அநேகமாக அனுப்பாது என தகவலறிந்த வட்டாரங்களிலிருந்து 'சண்டே ஐலன்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை தான் இரண்டு இந்திய நிபுணர்களை இந்தக் கொலை தொடர்பான விசாரணைக்கு அழைக்குமாறு அரசை கேட்டுக்கொண்டதற்கு எதுவித பதிலும் கிடைக்கவில்லை என திருமதி சிறிமா திஸநாயக்கா தெரிவித்துள்ளார். கேசி

### மாவீரர் வாரம்:

# வீரவணக்க கூட்டங்கள்

## கலந்துரையாடல், சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தையொட்டி இன்று 22-ந் திகதி நடைபெறும் சிரமதானங்கள், வீரவணக்கக் கூட்டங்கள், கலந்துரையாடல் வருமாறு:

### சிரமதானங்கள்:

கரவெட்டி இராஜகிராமம் பெரியவாய்க்கால், மழைக் காலத்தில் சுகாதராம் பேணப்படுதல்.

### வீரவணக்கக் கூட்டம்

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி, உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் ச. ச. நி, கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், பருத்தித்துறை பொலிகண்டி பத்திர காளி கோவில் முன்றல் ஆகிய இடங்களில் இரவு 7-30 மணிக்கு இடம்பெறும்.

### கலந்துரையாடல்

மாவீரர் நாள் தொடர்பாக பாடசாலை ஆசிரியர்களுக்கான சுலந்துரையாடல்: புங்குடுதீவு மகாவித்தியாலயம் பகல் 12 மணி, வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் பகல் 12-45 மணி, வேலணை நடராசர் வித்தியாலயம் பகல் 12 மணி. ஆகிய நேரங்களில் கலந்துரையாடல் நடைபெறும். -ம


# சாயிபாபா பிறந்தினம்

சுதுமலை ஸ்ரீ சாயி ஆலயத்தில் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின 68-வது பிறந்த தினம் எதிர்வரும் 23 - 11 - 94 புதன்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. காலை 4-30 மணிக்கு நகர சங்கீர்த்தனம், நண்பகலில் பஜனை, பகவான் திருவூஞ்சல் பூசை உட்பட பல நிகழ்ச்சிகள் நடம்பெறவுள்ளது. இதில் சகலரையும்பங்குபற்றி பகவானின் அருளைப் பெறுமாறு வேண்டுகின்றேம்.

இங்ஙனம்
ஆத்தாள்.

(சி-1325)

# மூன்றும் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்
(பேபபர் மணியம்)

தோற்றம்: 18-07-1920
மறைவு: 25-11-1991

ஆண்டு திதி: 22-11-1994

ஆண்டு மூன்று சென்றுலும் ஐயா உங்கள் நினைவலைகள்
மாண்டு தான் போய்விடுமோ மண்ணுலகில் எம்மை விட்டு
அகிலத்தில் கண்கண்ட தெய்வம் எங்கள் ஐயாவே
பாசத்தின் இருப்பிடமே பண்பதனின் பிறப்பிடமே
நீர் காட்டிய பாதையிலே சீராக நடக்கின்றேம்
வையகத்து விளக்கது போல் வாழ்ந்தஎங்கள உத்தமரே
வானத்தில் ஒளிர்கின்ற தாரகையாய் விளங்கிடுவீர்

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி பாசமுள்ள பிள்ளைகள்,
பற்றுமிக்க மருமகள்
நேசம் நிறைந்த பேரப்பிள்ளைகள்

'முருக வாசம்'
சுழிபுரம். வடக்கு,
சுழிபுரம்

(சி-1329)

மணிவாக்கு

சினம், பொறாமை:
வறுமை பேதமை
இல்லாத இல்லறமே
நல்லறம்.

- தொல்காப்பியர்

# சர்வஜனவாக்கெடுப்புமூலமே ஜனாதிபதி ஆட்சிமுறைஒழிப்பு

[கொழும்பு]

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு மற்றும் அரசியலமைப்பு திருத்தம்தொடர்பாக பெரும்பாலும் மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது உட்பட பல்வேறு அரசியல் சீர்திருத்தங்களை செய்வதற்கு அரசியல் அமைப்பை மாற்றியமைப்பதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு கிடைக்காவிட்டால் இது விடயத்தில் நாட்டு மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்துவதே மாற்றுவழியாக இருக்கும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என ஐ.தே.க. தெரிவித்துள்ளதும் தெரிந்ததே. (ரி-சி)

## இராசி பலன்

22 - 11 - 1994

செவ்வாய்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 6)

சதுர்த்தி; காலை 7-28 வரை, திருவாதிரை: காலை 11-49 வரை, இராகுகாலம்: மாலை 3-10 முதல் 4-32 வரை, சுபவேளை: காலை 11-40 முதல் 12-22 வரை, அமிர்த சித்தயோகம், கரிநாள்.

மேடம்: மனத்தைரியம், நற்கீர்த்தி, பணவரவு.

இடபம்: அதிக செலவு, தொழில் பீதி, குளப்பநிலை.

மிதுனம்: போசனசுகம், தாயார் சிறப்பு. பயணம்.

கடகம்: வீண் சங்கடம், பணமுடை, வயிற்றில் ரோகம்.

சிங்கம்: நண்பர் உதவி, காரியபலிதம், திட்டமிடல்.

கன்னி: பெரியோர் மரியாதை, கடமையுணர்வு, வாக்கு வகீகரம்.

துலாம்: நிர்ப்பந்தம், குடும்பப்பிரிவு, அலைச்சல்.

விருச்சிகம்: அபகீர்த்தி, சரீரபீடை, ஏமாற்றம்.

தனுசு: பதவி மாற்றம், தொழில் லாபம், புதிய சிந்தனை.

மகரம்: சகோதர பாசம், கல்வியியல் பாராட்டு, முயற்சி வெற்றி.

கும்பம்: தவறானவழிநடதல், அதிகாரிகள் சினம், சுப விரயம்.

மீனம்: நம்பிக்கை குறைவு, முரண்பாடு, உறவினர் பகை.

ஜோஸ்யர்

## நமது நோக்கு

### நந்தி விலகுமா?

விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம் பற்றி அறிவித்த போது மௌனமாக இருந்துவிட்டு இறுதி நேரத்தில் கடிதம் எழுதியுள்ளது அரசு.

ஓரிரு வாரங்கள் போர் நிறுத்தத்தை நீடிக்கக் கோரிப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கடிதம் எழுதியுள்ளார்

தேசியத்தலைவர் உடன் பதில் கொடுத்திருக்கிறார்.

மூத்ததளபதிகளில் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார்: பதுங்கியிருந்து தாக்கப்பட்டிருக்கிறார்.

அது மாத்திரமல்ல தலை கொய்து கொண்டுபோகப்பட்ட அநாகரிகச் செயலும் நடைபெற்றிருக்கிறது.

இதுபற்றியும் போர் நிறுத்த காலத்தில் இராணுவம் நடந்து கொண்டது பற்றியும் விசாரணை நடத்தி உண்மையான அறிக்கை சமர்ப்பித்தால் அ சின் கோரிக்கை பற்றி பரிசீலிக்கத் தயார் எனப் பதிலளித்திருக்கிறார்.

போர் நிறுத்த காலத்தில் இராணுவம் நடந்து கொண்ட விதம் பற்றிப் பிரதி அமைச்சருக்கு எதுவும் தெரியாதா?

அதுபற்றி எவ்விதவிளக்கமோ விசனமோ தெரிவிக்கப்படாத நிலையில் மேலும் போர்நிறுத்தம் பற்றிப் பேசுவதுஎவ்வளவு வெட்கக் கேடானது?

பொதுமக்கள் ஆணை கிடைத்ததும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு கிடைத்த பின்பும் அரசு இழுத்தடிப்பதற்கான காரணம் என்ன?

சுவாமி வரம் கொடுத்தாலும் யாரோ இடையில் தடுப்பார்களாம் யாரவர்?

நந்தி போற் குந்தியிருந்து குறுக்கிட்டுத் தொழிற்படுவோர் யார்? காரணம் என்ன?

போர்த் தளபாடக் கொள்வனவில் இலாபம் தேடுவோர் என்கிறார்கள் சிலர். சில வெளிநாட்டுச் சக்திகள் வேண்டுமென்றே அரசியல் தில்லுமுல்லுகளில் ஈடுபடுகிறார்கள் என்கிறார்கள் வேறு சிலர்.

மக்களின் உயிரோடு, உடமைகளோடு சம்பந்தப்பட்ட விஷயமிது. தீய நோக்கோடு செயற்படுபவர்களின் உண்மைநிலை கண்டறியப்படவேண்டும்.

குறுக்கே நிற்கும் நந்தி பற்றி விசாரித்து அதை விலக்கவேண்டும்.

அரசு கீச்சு மாச்சுத் தம்பலம்'' எனப்பாடிக் கொண்டிருக்காது விசாரணையை உடன் மேற்கொள்ளவேண்டும்!

# இராணுவ அதிகாரிகளும் பேச்சில் பங்குபற்ற வேண்டும்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் ஒரு வாரம் போர் நிறுத்தம் பற்றி அறிவித்திருந்ததும் இந்த அரசுக்கு இக்கட்டானதும் சிக்கலான நிலையும் ஏற்பட்டதாக ராணுவ பகுப்பாய்வாளர் 'சண்டே ரைம்ஸ்'சில் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: வாராந்த அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சரவை பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா கூடஇதுபற்றி ஒன்றும் தெளிவின்றி காணப்பட்டார்.

இந்த வாரம் மாவீரர் வாரம் அனுஷ்டிக்கும் தருணத்தில் புலிகள் பாரிய தாக்குதலை வழமைபோல் நடத்தலாம் என கருதப்படுகிறது. இதனல் ராணுவம் உசார் படுத்தப்படுகிறது.

பாதுகாப்பு செயலர் ஹமில்டன் வணசிங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவை சந்தித்து புலிகளின் போர் நிறுத்தம் பற்றியும், இந்த வாரம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் தாக்குதல் பற்றியும் கலந்துரையாடியுள்ளார். அத்தோடு மாவட்ட பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர்களையும் சந்தித்து பேசியுள்ளார்.

அரசாங்கம் போர்நிறுத்தத்திற்கு சம்மதித்து விடுமோ என ராணுவம் அஞ்சுகிறது.

பேச்சுவார்த்தையில் இராணுவத்திலிருந்தும் ஒருவரை தெரிவு செய்யாதது குறித்து சிரேஷ்டஅதிகாரிகள்அதிருப்தியடைந்துள்ளனர் புலிகள் தரப்பில் போராளி திரு. கரிகாலன் கலந்து கொள்கையில் ராணுவ தரப்பில் ஒருவரை சேர்க்காதது ஒரு பின்னடைவு என அவர்கள் கூறுகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கே-சி)

# முப்படைகளிலும் பாரிய மாற்றங்கள்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ் திணைக்களம் மற்றும் முப்படைகள் மத்தியில் விரைவில் பாரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இம் மாற்றங்களுக்கான திட்டங்களை அரசாங்க உயரதிகாரிகள் மிகதீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

புதிய ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிற்குள் முப்படையினரும் இருக்கும் விதத்திலும் கடந்த காலங்களில் ஆயுதக் கொள்வனவுகளில் இடம் பெற்ற மோசடிகளை கருத்தில் கொண்டும் இம் மாற்றங்கள் நிகழவுள்ளதாக கூறப்படுகிறது. ரிசி

## 3 கிலோ மா விநியோகம்

(அரியாலை)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு 3 கிலோ மா, கிலோ 8 ரூபா 50 சதமாக வழங்கப்பட்டு வருகின்றது. 59-ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 — 11 — 22

செவ்வாய் இரவு

08-01 மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி—சி. கண்ணம்மா எழுதிய ''சுதந்திரப் போரின் சுவடுகள்''

08-20 நலந்தானா நிகழ்ச்சியில்—''கண்ணில் ஏற்படும் வெள்ளெழுத்து நோய்க்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்''

08-30 செய்திகள்

08-40 மாங்குளம் முகாம் தகர்ப்பு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி— காயத்திரி எழுதிய வீழ்ந்தது மாங்குளம் விடியலின் பாதையில் தெரிந்தது ஒளிதீபம்.

09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

1994 — 11 — 23

புதன் காலை

07-02 மாவீரவணக்கம்

07-15 நீங்கள் கேட்டவை

07-30 செய்திகள்

07-35 பத்திரிகைச் செய்திகள்

07-40 மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி சி. கண்ணம்மா எழுதிய ''முன்னேற்றம் படிகளும் மூலக்கருத்துகளும்''

08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# ஆயுதங்களுடன் நடமாட தமிழ் குழுக்களுக்கு அனுமதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் படையினருக்கு உதவி புரியும் தமிழ் குழுக்கள் தொடர்ந்தும் ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு அரசு அனுமதித்துள்ளதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

இதுபற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஹமில்டன் வனசிங்கா தெரிவிக்கையில்,

வவுனியா, மட்டக்களப்பு, யாழ். தீவுப் பகுதியில் படை நடவடிக்கையின்போது புளொட், ஈ.பி.டி.பி, போன்ற தமிழ் குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படும் என்றார்.

சந்திரிகா பிரதமராக பதவி ஏற்ற உடனே தமிழ் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படும் எனக் கூறியிருந்தார். பின் அதனை தளர்த்தி தேர்தல்களின் பின் இது நடைமுறைக்கு வருமெனக் கூறினார். ஆனல் தற்போது இக் குழுக்கள் தொடர்ந்தும் ஆயுதங்களுடன் நடமாட அவர் அனுமதியளித்துள்ளார்.

ஆயுதப் படையினரும் மேற்கடி குழுக்களும் தவிர்ந்த வேறு யாராவது ஆயுதம் வைத்திருந்தாய அது பாரிய தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருப்போரை உடனடியாக கைது செய்யுமாறும் அரசு உத்தரவிட்டுள்ளது. -சி

## பலதும் பத்தும்

### சுன்னாகம்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்....... அகில இலங்கையில்....... மூன்றும் இடத்தைப் பெற்ற யசிந்தன் சுன்னாகத்தைச் சேர்த்தவன்.

இன்று நேற்றல்ல........ சுன்னாகம் நீண்டகாலமாவே தமிழுக்குப் பெருமை சேர்த்த ஊர் ஏழாலைக்குச் சென்று தமிழ்ப்பணி செய்தாலும் குமாரசாமிப்புலவர் சுன்னாகத்தைச் சேர்ந்தவரே!

தற்போது——விநாயக விரதம் அனுஷ்டிக்கப்படுகிறதல்லவா? அந்த விரத மான்மியம் உரைக்கும் ''பிள்ளையார் கதை'' என்ற நூலை இயற்றிய வரத பண்டிதரும் (1656—1716) சுன்னாகத்தைச் சேர்ந்தவரே. தமிழ், வைத்தியம் ஆகியவற்றிற் புலமை படைத்த இவர் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், அமுதாகரம், கிள்ளை விடு தூது போன்ற நூல்களையும் இயற்றியவர்.

பி. குறிப்பு:

தமது ஊர்ப்பெரியார்கள் பற்றிய சிறு குறிப்புகள் வரவேற்கப்படுகின்றன.

—மயூரன்

# புலிகளுடன் பேசியே தீர்வு காணமுடியும்

## ஹமீத் நம்பிக்கை

[கொழும்பு]

இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படவேண்டுமாயின் விடுதலைப்புலிகளுடனுனஉடன்பாட்டின் மூலமே தீர்க்கமுடியும் இல்லையேல் அது நடைமுறைச்சாத்தியமற்றதாகும்.

ஐக்கிய தேசிய கட்சியின் புதியதவிசாளராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் 'சண்டே ரைம்'சுக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் நாங்கள் எல்லோரும் ஒரு அரசியல் தீர்வையே விரும்புகிறோம். அப்போதுதான் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழலாம். நீண்டு கொண்டே போகும் இந்த பிரச்னைக்கு அவசியம் தீர்வு காணப்படவேண்டுமென்பது உறுதி, அரசாங்கம் அதற்கு தான் தயார் என்பதற்கு நேர்மையை காட்டியுள்ளது. அதன் படி முறையை அரசு நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மேலும் கூறினர்.

- கே-சி

பணம் சேர்ப்பது தனக்காக
பனை நடுவது பிறருக்காக

# வடக்குகிழக்கு பிரச்னையை உடன் தீர்க்கவேண்டும்

## அஸ்கிரிய பீடத்தலைவர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னையை தீர்க்க புதிய அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அஸ்கிரியபீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய பலிப்பான சந்தானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டியில் பெத்த மதபீடத் தலைவர்களை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா சந்தித்தபோதே அஸ்கிரிய மகா நாயக்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க-இ)

# அரசு ராணுவம் இடையில் நெருககடிநிலை ஏற்படும்?

(கொழும்பு)

அரசுக்கும் இராணுவத்துக்குமிடையில் ஒரு நெருக்கடியான நிலைஏற்படலாமென ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

யுத்தநிறுத்தவிடயத்திலும், விடுதலைப் புலிகள் அரசிடம் கோரியுள்ள லெப். கேணல் அமுதன் (மல்லி) சம்பந்தமான விசாரணையிலும் அரசுஇராணுவத்துடன் பகைத்துக்கொள்ள வேண்டிய ஒருநிலை ஏற்படலாமென்றும்தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா பிரதமராக இருந்தபோது இராணுவத்தைக் கடுமையாக விமர்சித்து ஒரு நெருக்கடி நிலையை ஏற்கனவே சம்பாதித்துவிட்டார்.

இப்போது யுத்தநிறுத்தமும் விசாரணையும் அவருக்கும் இராணுவத்துக்கு மிடையில் மற்றொரு நெருக்கடிநிலையை ஏற்படுத்தியுள்ளது,

எனவே ஜனாதிபதி சந்திரிகா இந்த விடயத்தில் மிகவும் அவதானமாகவே நடந்து கொள்ளவேண்டும் என அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (இ)

# காமினியின் மகனை

## அரசில் இணைக்கமுயற்சி

(கொழும்பு)

காமினி திசநாயக்காவின் மூத்த மகனை நவீன் திசநாயக்காவை, பொதுசன ஐக்கிய முன்னணியில் இணைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றதாம்.

இதன் ஒரு கட்டமாக, முக்கிய பிரதி அமைச்சர் ஒருவர் காமினியின் மகன் நவீனைச் சந்தித்து பொதுசன ஐக்கிய முன்னணியில் சேர்ந்து ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து செயற்படுமாறு கேட்டுள்ளாராம். எனினும் நவீன் அதற்குப் பதில் எதுவும் கூறவில்லையாம்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள காமினி கோஷ்டியினரை பொதுசன ஐக்கிய முன்னணியில் இழுக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது. சி-இ

# பரீட்சையி

# வர்த்தகத்துறை புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டமானாறு வெளிக்கள நிலையம் தற்போது நடாத்தும் க. பொ. த. உயர்தர வகுப்புக்களுக்கான யாழ். மாவட்டப் பொதுப்பரீட்சையில் ஆண்டு 13 இற்குரிய வர்த்தகக் துறைசார்ந்த பாடங்களில்ஒரு வினுத்தாள் மட்டும் வழங்கப்படுவதாக பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக இந்தத் தவணையில் கற்பிக்கப்பட்ட பாடவிடயங்களுக்கு முக்கியத்துவமில்லாது போயுள்ளது. புதிய நடைமுறை விடயங்கள் பலவற்றையும் உள்ளடக்கிய வர்த்தகம், பொருளியல் ஆகிய பாடங்களில் இது பெரிய பாதிப்பாகும்.

இதனுல் அடுத்த வருட ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தங்களைச் சரியான வகையில் மதிப்பிடவும், பரீட்சைக்குத் தயார்படுத்தவும் முடியாதுள்ளது. பல்கலைக்கழக அனுமதிக்கு மிகக்கூடிய வெட்டுப்புள்ளி நிர்ணயிக்கப்படுகிறன அதிகளவு மாணவர்கள் கற்கின்ற வர்த்தகத்துறையின் பரீட்சைப் பெறுபேறுகளை இது பெரிதும் பாதிக்கும் என்பதனை ஆசிரியர்கள் மாணவர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாணவர் கல்வி முன்னேற்றத்தை கவனத்தில் கொண்டு எதிர்வரும் 29-ம் திகதியில் இருந்து தொடர்ந்து நடைபெறும் பரீட்சையில் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் எனப் பலரும் எதிர்பார்க்கின்றனர்.

மலையகத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

தொடர்ந்தே மலையகத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாம்.

மேற்படி இரு இளைஞர்களும் யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்றவர்களா என்பதை அறியும் பொருட்டு, கொழும்பிலிருந்து புலனுய்வுத்துறையினர் நுவரெலியாவுக்குச் சென்றுள்ளார்களாம். சி-இ

# ஓய்வூதியர் நலன்பேண வைப்பு நிதியம்

## மாதம் 3 ரூபா அறவீடு

(கொழும்பு)

மூன்று லட்சத்து 20ஆயிரத்துககு மேற்பட்ட ஓய்வூதியர்களின் நலன்களை பேணுவதற்கு ஓய்வூதியத் திணைக்களம் வைப்புநிதி ஒன்றைஆரம்பிக்க இருப்பதாக 'தினமின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கான சட்டமூலம் ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஓய்வூதியர்களின் பொது நலன்கள் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தல் அவர்களின் சுகாதாரம் இறப்பு போன்றவைக்கு இந்த வைப்புநிதி உதவும் என்று ஓய்வூதியத்திணைக்கள பிரதி ஆணையாளர் டி. ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்காக ஓய்வூதியர்களிடம் மாதாந்தம் மூன்றுரூபா அறவிட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-சி)

# கின்னஸ் புத்தகத்தில் சந்திரிகாவின் பெயர்

(கொழும்பு)

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்காவின்பெயர் உலகசாதனைப் புத்தகமான 'கின்னஸ்' புத்தகத்தின் அடுத்த பதிப்பில் இடம் பெறவுள்ளது.

தாய், தந்தை பிரதமராகப் பதவி வகித்தவர்களின் மகள் ஒருவர், அதே நாட்டுக்குப் பிரதமராகவும், பின்னர் ஜனாதிபதியாகவும் பதவி வகித்தது உலகில் வேறு எந்த நாட்டிலும் இதுவரை இல்லை.

உலகசாதனைகளைப் பதிவு செய்யும் 'கின்னஸ்' புத்தகம் உலகிலேயே அதிகம் விற்பனையாகும் நூல் என்பது குறிப்பிடத்தக்கது 1990 ஆம் ஆண்டு வெளியான கடைசிப்பதிப்பு, ஆறு கோடியே 50 லட்சம் பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்துளளது. (வி:இ)

அரசு

[1ம் பக்கத் தொடர்ச்சி[

திரு. தொண்டமானை பொதுசன ஐக்கிய முன்னணியில் இணைத்துக்கொண்டதினுல் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளதாகவும், மலையக முன்னணியின் தலைவரும் பிரதி அமைச்சருமான சந்திரசேகரனும், திரு. செல்லச்சாமியும் தொண்டமானின் வருகைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றபடியாலும் விரைவில் தொண்டமான் பொதுசன ஐக்கிய முன்னணியில் இருந்து அகற்றப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

காமினி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தப்பட்டவர் வெலிக்கடை ஒபயசேகரபுர வீடொன்றில் தங்கியிருந்த அந்த வெளிநாட்டு அமைப்பின் கார்ச்சாரதியாக இருக்கும் ஒருவரை பொலிஸார் சந்தேகித்து இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் சம்பந்தப்பட்ட இரண்டு பெண்களுக்கும் இந்த வெளிநாட் அமைப்பொன்றின் சாரதி குடும்பம் உதவி புந்துள்ளது என்றும் இந்த வீட்டைப்பொலிஸார் பரிசோதித்தபோதுபலஆவணங்களை கைப்பற்றினர் என்றும் திவயின, மேலும் தெரிவித்துள்ளது. சு,மசி

இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா பாதுகாப்புத்துறை ஒதுக்கப்பட்டுளளது,

புதிய அரசு அடுத்த ஆண்டு முற்பகுதியில் தனது முதல் பட்ஜட்டைச் சமர்ப்பிக்கும் வரை தற்காலிகமாக 630 கோடி ரூபாவைத் தற்காலிகக் கணக்கு வாக்கெடுப்புக்கு ஒதுக்கியுள்ளது.

ஏனைய சில அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விபரம் வருமாறு:

நிதி அமைச்சு; 23 கோடி 40 லட்சம் ரூபா, புனர்வாழ்வு அமைச்சு: 150 கோடி ரூபா பொது நிர்வாக அமைச்சு: 390 கோடி ரூபா. மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு: 130 கோடி ரூபா. ஜனசவிய ஆணையாளர்: 150 கோடி ரூபா. சி-இ

லெப். கேணல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தமது அஞ்சலியை செலுத்தினர்.

லெப். கேணல் அமுதனின் வித்துடல் அண்மையில் வன்னி மாவட்ட மாவீரர் பணிமனையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

தொடர்ந்து புதுக்குடியிருப்பு மாவீரர் பணியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட வித்துடலுக்கு விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி பொட்டு அம்மான் தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் மற்றும் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலரும் அஞ்சலியுரைகளை நிகழத்தினர்,

இராணுவ மரியாதைகளுடன் லெப். கேணல் அமுதனின் வித்துடல் விதைக்கப்பட்டது. (க]

தலைவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் சிலர் கசிப்பு உற்பத்தி செய்தவர்கள், கசிப்பு விற்பனை செய்பவர்கள், களவுகள் செய்தவர்கள் சமூகச் சீர்கேடுகள் புரிந்தவர்கள் என்று பல குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள்.

இவர்கள் பெரும்பாலும் குடும்பப் பின்னணி பார்த்து விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் புரிந்த குற்றத்தை மறந்து சமூகத்தில் நற்பிரசைகளாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு விடுதலை செய்கின்றேம். இவர்களில் சிலருக்கு சில ஸ்தாபனங்கள் ஊடாக புனர்வாழ்வு அளிக்கப்பட்டிருக்கின்றது.

அத்தோடு தேசிய தலைவர் ஏழு பேருக்குத்தண்டனையையும் குறைத்துள்ளார். மூன்று பேருக்கு இரண்டு வருடத் தண்டனையை ஒரு வருடமாகவும் ஒருவருக்கு 4 வருடத் தண்டனையை ஒரு வருடமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் எல்லோரும் தமிழீழ நீதிமன்றத்தினுல் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் என்றுர். (ம)

ரஷ்ய

[1ம் பக்கத் தொடர்ச்சி[

முத்திட்டு அனுமதிவழங்கிய இந்த ஆயுதங்களின் பெறுமதி 350 கோடி ரூபாவாகும்.

இதன் பிரகாரம் 'அன்டனட தாக்குதல் விமானங்கள்- 03. 8 ஹெலிகொப்டர், 200 யுத்த டாங்கிகள் 02 பீரங்கி கடற்படைக் கப்பல் ஆகியவையே கொள்முதல் செய்யப்பட உள்ளது.

உரியமுறையில் இந்த ஆயுதங்களை இறக்குமதி செய்வதற்கு முன்னைய அரசாங்கம் கேள்விப்பத்திரங்கள் கோராதபடியால், மீண்டும் கேள்விப்பத்திரங்கள், கோரி இந்த ஆயுதங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

யுத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகள் முடிவடையும் வரை இடைநிறுத்தியது எனத் தெரிவித்தது என்றுர்,

யுத்தமே இன்று நாடு எதிர்நோக்கும் மிகப்பெரிய பிரச்னை அரசின் சமாதான முயற்சியை தொடருமாறு நாட்டு மக்களும் கூறியுள்ளனர். இதுபற்றி தங்கள் கருத்து என்ன? சமாதான . பேச்சு தொடர்வது குறித்து நீங்கள் சந்தோஷமடைகிறீர்களா? வடபகுதி யுத்தம் குறித்து உங்கள் சொந்த கருத்து என்ன? என்று கேட்டபோது;

பேச்சுக்களின் விளைவு என்ன என்று அரசு கூறமுடியுமானுல் நாம் எமது நிலைப்பாடு என்ன என்பது பற்றி கூறுவோம்: இந்த தருணத்தில் நாம் அது பற்றி எதுவும் கூறவிரும்பபவில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அதன்மூலம் மாகாண சபைகள் அமைக்கப்பட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜாஉரிமை வழங்கினேம்.

ஆனல் சுதந்திரக் கட்சியினர்வீதிகளில் இறங்கிபெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆனல் அப்படி எதனையும் செய்ய நாம் விரும்பவில்லை. இதில் எமது கருத்து ஆதரவாக அல்லது எதிர்ப்பாக இருந்தால் நாம் அவர்களுக்கு சமாதானமுறையில் எடுத்துக் கூறுவோம் என்றுர். (சி-இ)

ரணிலுக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

இருப்பவர்கள் கடந்த காலத்தில் பல ஊழல்களை புரிந்தார்கள் என்றும் சிலர் கொலைகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் இப்படியானவர்களுடன் இணையாது புதிய கட்சியை ஆரம்பிக்கவே இந்தக் குழுவினர் செயல்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கட்சி ஆரம்பிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோரல மும்மரமாக தமது சகாக்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகின்றுர் என்றும் 'யுக்திய' குறிப்பிட்டுள்வது. (ம - இ)

சந்திரிக்காவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறுகையில்:

ஜனாதிபதி சந்திரிகா பிரதமரானவுடன் பொருளாதாரத் தடையைஓரளவு தளர்த்தியதுடன் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களையும் ஆரம்பித்தார். இதனுல் தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் அவர் மீது ஓர் பற்று ஏற்பட்டது. அத்துடன் இராணுவத்தின் தலைமைப் பீடத்தையும் கண்டித்தார்.

ஆனல் திருமதி சந்திரிகா ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்பு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், அவரது போக்கில்சிறுமாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது.

பௌத்த மதத்தினதும் பெரும்பான்மை மக்களினதும் நலன்களைப் பாதிக்காத விதமாகவே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வேன் என்று கூறினுர். இது கடந்த காலத் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் கூற்றுப் போல் இருந்தது. அத்துடன் இராணுவத்தின் போக்குப் பற்றித் தற்போது எதுவித கருத்தையும் கூருது அவர் மௌனமாகவே இருந்து வருகின்றுர் என்றும் கூறினுர். வி-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber ,B/16336/Bg